FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

Under Section 173 BNSS C

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8109725

1. District : அரியலூர் மாவட்டம் | PS: ஆ.க.எ.பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 05 மு.த.அ. எண் | Date: 18.09.25 நாள்

2. (i) Act சட்டம்: வழுதல் தடுப்புச் சட்டம் 1988 | Sections பிரிவுகள்: 01 S 7

(ii) Act சட்டம்: (திருத்திய சட்டம் 2018) | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 17.09.25 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 12.45 Hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.09.25 | Time : நேரம் 07.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.09.25 | Time : நேரம் 07.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலம் (நேரில் அறிவுரையின்)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கு திசை நோக்கி அரசு மேல்நிலைப் பள்ளி

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி தென்னந்தோப்பும் கிராமம், அரியலூர் மாவட்டம் திருமானூர் 5 Km தூரத்தில்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தினம்பரசன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அரிவரசன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 33/25 | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி எண். 256, தெற்கு தெரு மெயின்ரோடு, தென்னந்தோப்பும் கிராமம், அரியலூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

சரவணன், கிராம நிர்வாக அலுவலர், தென்னந்தோப்பும் கிராமம், அரியலூர் மாவட்டம், அரியலூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18.09.25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.09.25
11.00 hrs

Name: பெயர்
Rank: நிலை

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2025 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

18.09.2025-ம்தேதி காலை 07.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கோவிந்தபுரம் ஊராட்சி, ஜெயராமபுரம் கிராமம், தெற்குத்தெரு, கதவு எண் 256 என்ற முகவரியில் வசிக்கும் செல்வராஜ் மகன் செ.சிலம்பரசன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவினை பெற்று, அதுகுறித்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ள கோவிந்தபுரம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.சரஸ்வதி என்பவரின் முன் நடத்தைகள் பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இன்று 18.09.2025 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2025, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: செ.சிலம்பரசன், வயது 33, த/பெ. செல்வராஜ், எண். 256, தெற்குத் தெரு, ஜெயராமபுரம், கோவிந்தபுரம் ஊராட்சி, அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். செல் - 9344540805, 9551110280 பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அம்மா, நான், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கோவிந்தபுரம் ஊராட்சி, ஜெயராமபுரம் கிராமம், தெற்குத்தெரு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான், சென்னையில் தள்ளுவண்டியில் ஜுஸ் வியாபாரம் செய்து வருகிறேன். எனது அப்பா செல்வராஜ் 25.05.2021-ல் இறந்துவிட்டார். எனக்கு திருமணமாகிவிட்டது. எனது அம்மா சின்னப்பிள்ளை என் குடும்பத்துடன் அரியலூரில் வசித்து வருகிறார். எனது அக்கா பூங்கொடி மற்றும் தமிழ்கொடி ஆகியோர் திருமணம் ஆகி, அவரவர் குடும்பத்துடன் இருந்து வருகின்றனர். எனது அப்பா செல்வராஜ்க்கு, கணேசன் மற்றும் சின்னசாமி ஆகிய இரண்டு சகோதரர்கள் உள்ளனர். இவர்களில் எனது சித்தப்பா சின்னசாமி இறந்துவிட்டார். அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கோவிந்தபுரம் கிராம சர்வே எண். 490/4-ல் 0-1.50 ஏர்ஸ் பூர்வீக நிலம் மற்றும் 490/3D-ல் 0-6.50 ஏர்ஸ் பூர்வீக நிலம் எனது அப்பா செல்வராஜ், சித்தப்பா கணேசன், சின்னசாமி சித்தப்பாவின் பிள்ளைகளான வைரவேல், அன்பரசன், அன்பரசி மற்றும் அறிவழகன் ஆகியோர்களின் பெயரில் கூட்டு பட்டாவாக இருந்து வருகிறது. மேற்படி சொத்தினை நாங்கள் வாய்மொழியாக 3 பாகமாக பிரித்துக்கொண்டு, அதில் ஒரு பாகத்தினை நான் அனுபவித்து வருகிறேன். எனது அப்பா இறந்து விட்ட காரணத்தால் மேற்படி நிலங்களின் பட்டாவில் வாரிசு அடிப்படையில் எனது பெயரையும், எனது அம்மா மற்றும் அக்காக்களின் பெயரையும் சேர்க்க 12.09.2025 அன்று மனு எண். 2025/0103/17/317742-ன்படி ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். அந்த மனு சம்பந்தமாக 15.09.2025-ம்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் கோவிந்தபுரம் VAO அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கு அலுவலில் இருந்த VAO திருமதி.சரஸ்வதி அவர்களை சந்தித்து, ஆன்லைனில் பட்டா பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்திருந்த விபரத்தை சொல்லி, பட்டா மாற்றம் செய்து கொடுக்கும்படி கேட்டேன். அப்போது அவர், எங்கள் நிலத்தினுடைய கம்ப்யூட்டர் சிட்டா, இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவற்றினை கொடுக்கும்படி கேட்டார். நான் மேற்படி ஆவணங்களை அவரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, இப்போது முக்கியமான வேலையா இருக்கேன், கிராம உதவியாளர் அனிதாகிட்ட சொல்கிறேன், நீங்க அப்புறமா வந்து என்னை பாருங்க என்று சொல்லி

என்னை அனுப்பிவிட்டார். பிறகு அன்றே எனது செல் எண் 9344540805-ல் இருந்து கிராம உதவியாளர் அனிதாவின் செல் எண் 9843906371-க்கு தொடர்பு கொண்டு பேசியபோது, நாளை மறுநாள் வந்து VAO மேடத்த பாருங்கள் என்று சொன்னார். அதன்பின்னர் நேற்று 17.09.2025-ம்தேதி பகல் சுமார் 12.45 மணியளவில் கோவிந்தபுரம் VAO அலுவலகத்திற்கு சென்று, VAO சரஸ்வதி மேடம் அவர்களை பார்த்து எங்களது பட்டா பெயர்மாற்றம் சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர், உங்கள் பெயரை பட்டாவில் சேர்க்க லஞ்சமாக ரூ.2000/-ம் கொடுத்துடுங்க, உங்க வேலையை முடித்து கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். அப்போது, அவரிடம் நான்தான் ஆன்லைனிலேயே பணம் கட்டிவிட்டேனே, அப்புறம் எதுக்கு நீங்க தனியா பணம் கேக்குறீங்க மேடம் என்று கேட்டேன். அதற்கு அவர் நீங்க பணம் கொடுத்தீங்கன்னா உங்கள் வேலையை சீக்கிரம் முடித்துக்கொடுப்பேன், இல்லை என்றால் உங்கள் அப்ளிகேசன் பெண்டிங்கில்தான் இருக்கும் என்றார். அப்போது, நானே சென்னையில தள்ளுவண்டி கடை வச்சி நடத்திக்கிட்டு இருக்கேன், இந்த வேலைக்காக ஊருக்கு வந்ததால ஒரு வாரமா கடையும் போடல, ரொம்ப கஷ்டப்படுறேன், ஊருக்கு போரதுக்கே நான் யார்கிட்டயாவது கடன் வாங்கிக்கிட்டுதான் போகனும், பாத்து செஞ்சிக்குடுங்க மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர், சரி ரூ.2000-ல் ஆயிரம் குறைத்துக்கொண்டு, ரூ.1000/-ம் கொடுத்துடுங்க, இவ்வளவு தூரம் நீங்க கெஞ்சி கேக்குறதானாலத்தான் பாதியா குறைச்சிக்கிட்டேன், இதுக்குமேல குறைக்க முடியாது, அதனால நீங்க எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தீங்கன்னா உங்க பெயரை பட்டாவில் ஏத்துறதுக்கு ஏற்பாடு செய்வேன், இல்லன்னா இப்போதைக்கு உங்க வேலை நடக்காது என்று சொல்லிவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்றாலும் வேறு வழியின்றி அப்போதைக்கு சரிங்க மேடம், தற்போது என்னிடம் பணம் இல்லை, ஏற்பாடு செய்து கொண்டு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர், ஏற்பாடு பண்ணிக்கிட்டு, நாளைக்கு வந்து பாருங்க என்று சொன்னார். சரிங்க மேடம் என்று சொல்லிவிட்டு, வந்துவிட்டேன். பின்னர் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து கோவிந்தபுரம் VAO சரஸ்வதி அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1000/-த்தை ரெடிப்பண்ணிக்கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட கோவிந்தபுரம் VAO சரஸ்வதி என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு சிலம்பரசன் (தமிழில் ஒப்பம், தேதி 18/09/25). **Submitted,** Sir, Received this computerised complaint from the complainant on 18.09.2025 at 07.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 18.09.2025 at 07.30 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.05/2025, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) B.Kavitha, Inspector of Police, V&AC, Ariyalur.

18.09.25

I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

18.09.25
Inspector of police,
V&AC, Ariyalur
18.09.25